V6SS

விருதுநகர் மாவட்டப் பள்ளிகள்
முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - ஆகஸ்ட் 2022

வகுப்பு 6

நேரம் : 1.30 மணி | சமூக அறிவியல் | மதிப்பெண்கள்: 30

I. சரியான விடையைத் தேர்ந்தெடு: 5×1=5

1) பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை
அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்
இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்

2) தான்சானியா ..... கண்டத்தில் உள்ளது.
அ) ஆசியா ஆ) ஆப்பிரிக்கா இ) அமெரிக்கா ஈ) ஐரோப்பா

3) சிந்துவெளி நாகரிகம் எக்காலத்தைச் சார்ந்தது .....
அ) பழைய கற்காலம் ஆ) இடை கற்காலம்
இ) புதிய கற்காலம் ஈ) உலோக காலம்

4) மகரரேகையில் சூரியக்கதிர் செங்குத்தாக விழும் நாள் .....
அ) மார்ச் 21 ஆ) ஜூன் 21
இ) செப்டம்பர் 23 ஈ) டிசம்பர் 22

5) ''டிஸ்கவரி ஆஃப் இந்தியா'' என்ற நூலினை எழுதியவர் .....
அ) இராஜாஜி ஆ) வ.உ.சி.
இ) நேதாஜி ஈ) ஜவகர்லால் நேரு

II. நிரப்புக: 5×1=5

1) தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட ஆண்டு .....
2) இந்தியாவில் கனிமவளம் நிறைந்த பீடபூமி .....
3) பேரண்டம் உருவாகக் காரணமான நிகழ்வு .....
4) வரலாற்றின் தந்தை .....
5) பாறை ஓவியங்கள் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ..... என்னுமிடத்தில் காணப்படுகின்றன.

III. கீழ்க்காணும் ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி: 5×2=10

1) வரலாற்றுக்கு முந்தைய காலம் பற்றி எழுதுக.
2) ஹோமோசேப்பியன்ஸ் மனிதர்களின் இரு பண்புகளை எழுதுக.
3) ஆற்றங்கரைகள் நாகரிகத் தொட்டில்கள் ஏன்?
4) உட்புறக் கோள்களைப் பெயரிடுக.
5) அட்லாண்டிக் பெருங்கடலின் எல்லைகளாக உள்ள கண்டங்கள் யாவை?
6) மலை, பீடபூமி - வேறுபடுத்துக.
7) இந்தியா ஏன் துணைகண்டம் என்று அழைக்கப்படுகிறது?

IV. விரிவான விடையளி: 2×5=10

1) சிந்துவெளி நாகரிகம் ஒரு நகர நாகரிகம் காரணம் கூறு.
2) புவிக்கோளங்களின் தன்மைகள் பற்றி விவரி.
3) இந்தியா ''வேற்றுமையில் ஒற்றுமை'' நிலவும் நாடு என ஏன் அழைக்கப்படுகிறது?